செ.வெ.எண் : 394/2016 நாள்: 23.06.2016

# பத்திரிகை செய்தி

## குருந்தன்கோடு வட்டாரத்தீல்
## நடமாடும் மண் பரிசோதனை நிலைய ஊர்திஇ வருகை

நடமாடும் மண் பரிசோதனை நிலைய ஆய்வு ஊர்தி குருந்தன்கோடு வட்டாரத்தில் ஜூன் நான்காம் வாரத்தில் 27.6.2016 அன்று சரல் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியிலும் 28.6.2016 அன்று நெய்யூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியிலும் 29.6.2016 அன்று மாடத்தட்டுவிளை தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியிலும் பயணம் மேற்கொள்ளப்பட்டு மண்ஆய்வுப்பணி மேற்கொள்ளப்பட உள்ளது. எனவே விவசாயிகள் இவ்வாய்ப்பினை பயன்படுத்தி தங்கள் மண்மாதிரிகளை நடமாடும் மண்பரிசோதனை நிலையத்தில் கொடுத்து உடனடியாக மண்மாதிரி முடிவுகளை பெற்றுக்கொள்ளலாம் என்று வேளாண்மை உதவி இயக்குநர்இ இராஜாக்காமங்கலம் திருமதி. எம்.ஆர்.வாணி அவர்கள் விவசாயிகளை கேட்டுக்கொண்டுள்ளார்கள்.

வேளாண்மை உதவி இயக்குநர்
இராஜாக்காமங்கலம்

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.